27th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி ஒருவாறு சில கைத்தொழில்களாவது இருக்கக்கூடிய இடங்களை எடுத்தால்தான் அது நன்கு இயங்க முடியும். ஆகவே, அதுவும் மனதில் வைத்துக்கொள்ளப்படும்.

Women's College

* 436 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to open a college for women in the Kanyakumari district?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI T. T. DANIEL : In view of the fact that many of the girl students pass the E.S.L.C. Examination when they are hardly 15 years and in view of the fact that many parents do not desire to send their daughters to a men's college, will the Government be pleased to consider the desirability of extending financial assistance to any private institution which may be coming forward to open a women's college?

THE HON. SRI C. SUBRAMANIAM : The opening of a new college has got to be sanctioned by the University first and then alone the question of financial assistance by the Government arises. So, I would request the hon. Member to approach the University and if they give sanction for the opening of a new college, then the parties concerned may approach the Government for financial assistance.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* REDUCTION OF PAY SCALES OF SECONDARY TEACHERS IN ELEMENTARY SCHOOLS.

MR. SPEAKER : அன்பழகன் அவர்கள் 40-வது ரூல் பிரகாரம் அமைச்சர் அவர்களை ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அன்பழகன் அவர்கள் அதைக் கேட்கலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றிய முழு விவரங்களும் இந்த ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டினில் கொடுத்தாகிவிட்டது. ஆகவே இது அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். 9-20 a.m.

MR. SPEAKER : I suppose it is acceptable to the hon. Member.

SRI K. ANBAZHAGAN : அவைத்தலைவர் அவர்களே, இந்த அவசரக் கேள்விக்கு கொடுத்த பதிலிலிருந்து இப்போதுள்ள நிலைமை என்ன என்று தெரிந்துவிட்டது என்று சொன்னாலும் இதனால் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றி விளக்குவதற்காக கொண்டு வந்திருக்கின்ற இந்த அவசர காருத்தின் மீது இரண்டு நிமிட நேரத்திற்குள் அதைப்பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். உண்மையாகவே மிக குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்ற அசிரியர்களின் சம்பளத்தை குறைப்பது என்று வருகிற பொழுது அவர்களுடைய நிலை என்ன என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். ரூ. 42–2–85 என்று செக்ண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு என்று தெரிவிக்கப்பட்டிருந்தும் தனிப்பட்ட பள்ளிகளில் இருக்கும் செகண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்கு 40–1–48 என்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். குறிப்பாக இருக்கக்கூடிய சம்பளத்தை கூட்டவேண்டும் என்று வேண்டுகோள் இருக்கின்ற நேரத்தில் திடீரென்று இவ்விதம் உத்தரவு பிறப்பிப்பது என்பது—தேள் ஒருதரம் கொட்டினாலும் கொட்டினதற்கு சமம் என்பதை நாம் உணர்ந்திருக்கவேண்டும். இந்த உத்தரவைப்பற்றி